**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.64/2024 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு.ஹரி கிருஷ்ணன் |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | கோவிந்தாங்கல் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 14.09.2021 அன்று மதியம் 01.30 மணியளவில் நானும் என்னுடைய சித்தப்பா மனோகரன் என்பவரும் பஸ்டாப்பில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம் அப்போது பானாவரம் வட்ட காவல் ஆய்வாளர் எங்களிடம் வந்து ரங்கநாதன் என்பவர் கொலை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்து வழக்கு பதிவு செய்ததாகவும் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நானும் என்னுடைய சித்தப்பா மனோகரனும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் இரத்தம் தோய்ந்த மண் கலந்த ஆலமர காய்ந்த இலை சரகுகள் சிறிதளவும், வாக்கரூ எழுத்து பதிந்த செருப்புகள் இரண்டு வழக்கு சொத்துக்களாக போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் அவைகள் சான்று பொருட்களாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகவில்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.22 18:39:19 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.